THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, the 30th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Scholarships for children of political sufferers.

* 362 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the **Hon. the** Chief Minister be pleased to state—

(*a*) the number of children of the political sufferers awarded scholarships for education district-wise in our State so far;

(*b*) the number applied for the same; and

(*c*) whether the political sufferers and their children are allowed fee concessions for Post-Graduate studies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

(*c*) Yes.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதில் வருமான வரம்பு ஏதேனும் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இருக்கிறது. 3,600 ரூபாய்க்கு மேல்படாமல் இருப்பவர்களுக்கு, அந்தக் குடும்பத்திற்குத்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரை அவர்களைச் சுட்டுக்கொன்ற வாஞ்சிநாத அய்யர் அவர்கள் குடும்பத்திற்கு பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளைச் சுட்டுக்கொன்றவர்க்கும் தியாகிகள் பட்டியலில் சேர்த்து பரிசு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அவர்களே வைத்துக்கொள்ளலாம்.

திரு. எம். எஸ். மணி : இந்த உபகாரச் சம்பளத்திற்கு ராஜ்ய அரசாங்கம் எவ்வளவு தொகை கொடுக்கிறது, மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் பூர்வாங்கமாகத் தயாரித்த திட்டம் இது. ஆனால் ராஜ்ய அரசாங்கம் தான் இதைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 111 infra.

திரு. வை. சங்கரன் : இந்தச் சம்பளச் சலுகைத் தவிர வேறு ஏதாவது உத்தியோகம் போன்ற மற்ற வகைகளிலே சலுகை அளிக்கப்படுகிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேண்டிய சலுகைகள் அளிக்கப்படுகின்றன. விவரங்களுக்கு தனிக்கேள்வி வேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : அரசியல் தியாகிகளுக்கு உத்தியோகத் தகுதி பாராது எத்தனை பேருக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வெள்ளைக்கார கலெக்டரை சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதய்யர் குடும்பத்திற்கு அரசாங்கம் உதவி செய்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்னமேயே மற்றொரு கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: தியாகிகள் பட்டியலிலே சுதந்திரப் போராட்டத்திலே வன்முறைச் செயலில் ஈடுபட்டவர்களை சேர்க்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக்கேள்வி வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : பொது வாழ்க்கையில் நல்ல காரியம் மலரவேண்டுமென்று தியாகம் செய்தவர்களுக்கு அரசியல் தியாகிகள் என்று பெயர். ஆகையால் இந்தியை எதிர்த்து தீ குளித்தவர்களின் பெயரை இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்தான் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தியாகிகளினுடைய பந்துக்கள் யார் யாருக்கு இந்த வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோருக்கும் வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலிலே செக்கிழுத்த சிதம்பரனார் அவர்களுடைய பிள்ளைகளுக்கு அரசாங்கம் ஏதாவது உதவிப் பணம் அளித்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

20th March 1965]

திரு. ப. உ. சண்முகம் : யார் தியாகி என்பதற்கு பட்டியல் இருக்கிறதா ? அது முடிவடைந்துவிட்டதா? தியாகி என்று விண்ணப்பம் செய்வதற்கு யாரிடமிருந்து சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கவேண்டும். ஆறு மாதத்திற்கு தண்டனை அடைந்த வர்கள் அல்லது பாதுகாப்பு கைதியாக வைக்கப்பட்டவர்கள் அல்லது உயிர் இழந்தவர்கள் அல்லது காயம் அடைந்தவர்கள் என்று எல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது. மேலும் விவரம் வேண்டு மென்றால் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : அரசியல் தியாகிகள் எல்லோருக்குமே உத்தியோகம் வழங்கப்பட்டிருக்கிறதா ? பல அரசியல் தியாகிகள் உண்மைத் தியாகம் செய்திருந்தபோதிலும் கவனிக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லோருக்கும் உத்தியோகம் வழங்கப்பட்டது என்று சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட தகுதி இருக்கவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அரசியல் தியாகிகளில் ஒரு சிலருக்கு மாத்திரம் பூமி கொடுத்துவிட்டு, பலருக்கு கொடுக்கப் படவில்லை. எல்லோருக்குமே கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பூமி இருந்தவரை கொடுக்கப் பட்டது. அதற்கப்புறம் நிறுத்தப்பட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : விண்ணப்பம் போட்டவர்கள் பலர். கிடைத்தவர்கள் சிலர். சலுகை 3,600 ரூபாய்க்கு மேற் படாமல் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் என்ற வரம்பு இருக் கிறது. அப்படியில்லாமல் வருமான வரம்புக்கு உட்பட்டு விண்ணப்பம் செய்த எல்லோருக்குமே கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட நபர்களைப்பற்றிய விவரங்கள் கவனிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசியல் தியாகிகள் அத்தனை பேருக்கும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறதா ? அல்லது அதில் ஏழை எளியவர்களாக உள்ளவர்களுக்கு மட்டும் அளிக்கப் படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே சொன்னேன். 3,600 ரூபாய்க்கு மேற்படாமல் வருமானம் உள்ளவர்களுக்குத் தான் சலுகை அளிக்கப்படுகிறது.

[30th March 1965

திரு. கே. ஏ. மதியழகன்: விடுதலைப் போராட்டத்தின் மூலமாக நாம் பெற்ற சுதந்திரத்தை பேணி வளர்ப்பதற்கான இன்னொரு கட்டம்தான் அடுத்த போராட்டமான இந்த மொழிப் போராட்டம். இதில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் குடும்பத்திற்கு உதவி செயய் அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடுதலைப் போராட்டத்தோடு மொழிப் போராட்டத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தியாகிகளினுடைய பிள்ளைகள் பல பள்ளிக்கூடங்களில் படிப்பதால் தனித்தனியாக ஒவ்வொரு சர்ட்டிபிகேட் வாங்கவேண்டுமென்று விதி இருக்கிறதா ? அதைப் பற்றி புகார் வந்திருக்கிறதா ? ஒரே சர்ட்டிபிகேட்டைக் கொண்டு நகல்களை மற்ற பள்ளிகளுக்கு கொடுப்பதற்கு வசதி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை. விவரம் வேண்டுமென்றால் தனிக்கேள்வி வேண்டும்.

Memorial to Sri Jawaharlal Nehru

* 363 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a memorial in this State to the late Prime Minister, Sri Jawaharlal Nehru; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The details are under consideration.

திரு. வை. சங்கரன் : சட்டமன்ற அறையிலே காலியாக உள்ள இடத்தில் பண்டிட் நேருவின் உருவத்தை விரிவான முறையில் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வந்தால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ? அல்லது சர்க்காரே அதை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி ஏதாவது கோரிக்கை வந்தால் அதற்குமேல் என்ன செய்யவேண்டுமென்று அரசாங்கம் யோசிக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : புதிதாக கட்டப்படுகிற சட்டசபை விடுதிக்கு "நேருஜி சட்டசபை விடுதி" என்று பெயர் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டத்திற்கு அவர் பெயர் வைப்பது அப்பெரியோருடைய நினைவைப் பாராட்டுவதாகாது.